**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No : STC No.820/2021**
**Prosecution Witness : PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரித்தீவ் | | : |
| Father / Husband Name | : பசுபதி | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

( Accused absent. Counsel filed petition U/s.317 Of Cr.P.C. Petition heard and allowed. )

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **09/02/2024**

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில் )**

நான் கடந்த 10 வருடங்களாக மொபைல் ஷோரூம், வாட்டர் சப்ளை, ட்ராவல்ஸ் வைத்து தனியாக தொழில் செய்து வருகிறேன். மேற்படி மூன்று தொழில்களையும் எண்.24, வள்ளுவர் தெரு, காவங்கரை, சென்னை 66 என்ற முகவரியில் வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் மாணிக்கராஜ் என்பவருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அவர் எனது உறவினர் ஆவார். எனது அம்மாவின் உடன் பிறந்த சகோதரரின் உறவினர் ஆவார். இவ்வழக்கு சம்மந்தமாக எதிரிக்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பை நான் படித்து பார்த்துதான் அனுப்பப்பட்டது.

2. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி எனக்கு உறவினர் என்று சொல்லியுள்ளேனா என்றால், அவ்வாறு அதில் சொல்லவில்லை. தற்போது எதிரிக்கு சுமார் 72 வயதிருக்கும். தற்போது எதிரிக்கு சுமார் 85 வயது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு எதிரியால் அவரது வீட்டை விட்டு தனியாக வர முடியாது என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின்படி, மாணிக்கராஜ் 2016ஆம் ஆண்டிலிருந்து 2017ஆம் ஆண்டிற்குள் இரண்டு தவணையாக எதிரி என்னை அணுகி கேட்டுக் கொண்டதால், நான் ரூ.10,00,000/- வரை கொடுத்துள்ளேன். ஆனால் எந்த தேதியில் எதிரி என்னிடம் தொகை கேட்டார் என்றால், மேற்படி தேதி எனக்கு தெரியும். ஆனால், அதை நான் எனது வீட்டில் உள்ள ஒரு நோட்டில் எழுதி வைத்துள்ளேன்.

3. நான் 2016ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் தேதியிலும், 2017ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் தேதியிலும் எதிரிக்கு பணம் கொடுத்துள்ளேன். நான் எதிரிக்கு 2 தவணையாக பணம் கொடுத்ததாக வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த

புகாரில் மேற்படி சங்கதியை சொல்லியுள்ளேனா என்றால், சாட்சி புகார் தான் எங்கு கொடுத்தார் என்று தெரியவில்லை என்று கூறினார். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் மேற்படி 2 தவணையாக பணம் கொடுத்த தகவலை சொல்லவில்லை. நான் தாக்கல் செய்துள்ள சத்தியபிரமாண வாக்குமூலத்திலும் மேற்படி 2 தவணையாக பணம் கொடுத்த சங்கதியை சொல்லவில்லை.

4. எதிரி ஓய்வு பெற்ற அரசு ஊழியர் ஆவார். அவர் தான் மாதம் ரூ.25,000/- ஓய்வு ஊதியம் பெறுவதாக கூறினார். ( சாட்சி எதிரி அவ்வாறு கூறிதான் தன்னிடம் கடன் பெற்றதாக கூறினார். ) எதிரி அவரது மகனுடன் இருந்து வருகிறார். நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணம் குறித்த விவரத்தை அவரது மகனுக்கு தெரிய படுத்தினேனா என்றால், எதிரியும் அவரது சின்ன பையன் சத்தியனும் உடன் வந்து வாங்கினார்கள். மேற்படி சங்கதியை நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, சத்தியபிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை.

5. எதிரி என்னை பாண்டிச்சேரியில் உள்ள எனது சித்தி வீட்டிற்கு வந்து கடன் கேட்டார். நான் எனது சித்தியின் முன்னிலையில், சித்தியின் வீட்டில் வைத்து எதிரியும் அவரது மகன் சத்தியன் என்பவரும் வந்தபோது, நான் பணம் கொடுத்தேன். நான் எதிரிக்கு பணம் கொடுத்த இடத்தின் முகவரி எண்.653, வாணிதாசன் தெரு, அசோக்நகர், லாஸ்பேட்டை, புதுச்சேரி ஆகும். மேற்படி சங்கதியை எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, சத்தியபிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால், நான் அதை பற்றி சொல்லவில்லை.

6. நான் எதிரிக்கு எனது வீட்டில் சேமிப்பில் வைத்திருந்த பணத்தை எடுத்து கொடுத்தேன். மேற்படி பணம் எனது தந்தையின் ஓய்வூதிய பணம். மேற்படி எனது தந்தையின் ஓய்வூதிய பணத்தை கொடுத்தேன் என்ற சங்கதியை சொல்லவில்லை. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் அவரது வயது என்ன என்றால், அது எனக்கு சரியாக தெரியாது. ஆனால் அவர் மூத்த குடிமகன். நான் எதிரியிடம் பணம் கொடுத்ததற்கு ஆவணமாக ஏதேனும் எழுதி பெற்றுக் கொண்டேனா என்றால் நான் 2ஆம் தவணை பணம் கொடுக்கும்போது எதிரி என்னிடம் 2 காசோலைகள் கொடுத்தார். மேற்படி சங்கதியை நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், சத்தியபிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை.

7. நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் நபர், மாத ஓய்வூதியமாக ரூ.25,000/- பெற்று வந்தார். மேற்படி ரூ.25,000/- ஓய்வூதியம் பெறும் நபருக்கு எதன் அடிப்படையில் ரூ.10,00,000/- கடன் கொடுத்தேன் என்றால் எதிரி தனது மூத்த மகன் பாண்டிச்சேரியில் உள்ள ப்ரஸில் பணிபுரிவதாகவும், அவரது இளையமகன் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்று பணத்தை திருப்பி தருவதாக கூறியதின் பேரில் நான் கடன் கொடுத்தேன். மேற்படி சங்கதியை நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, சத்தியபிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் எனது சித்தியின் முன்னிலையில் பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, சத்தியபிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

8. நான் மேற்படி விவரங்களை வழக்கறிஞர் அறிவிப்பு, புகார், சத்தியபிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் சொல்லாததால், நான் அவரிடம் பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அவர் உறவினர் என்பதால் மேற்படி விவரங்களை சொல்லவில்லை. அவர் தனது காசோலையை முழுமையாக நிரப்பி கொடுத்தாரா என்றால், அவர் கொடுத்த காசோலையில் கையொப்பம் இட்டு, மற்ற விவரங்களை சொல்லும் தேதியில் நிரப்பிக் கொள்ளுமாறு என்னிடம் கூறினார். நான் எதிரி என்னிடம் அவர் சொல்லும் தேதியில் வங்கியில் காசோலையை நிரப்பி தாக்கல் செய்து கொள்ளுமாறு கூறினார் என்று எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, சத்தியபிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

9. நான் எதிரிக்கு 2வது தவணையாக காசு கொடுத்தபோது, காசோலை கொடுத்த சங்கதியை நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, சத்தியபிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது தந்தை தமிழக காவல் துறையில் பணிபுரிந்து 2010ஆம் ஆண்டு ஓய்வு பெற்றதற்கு வந்த ஓய்வூதியமான ரூ.9,20,000/- மற்றும் அதன் பின்னர் 2013ஆம் ஆண்டில் நாங்கள் எங்களது இடத்தை ரூ.11,00,000/- விற்றோம். எனது மாத வருமானம் ரூ.1,00,000/- ஆகும். மேற்படி விவரங்களை நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, சத்தியபிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை.

10. நான் எதிரிக்கு சொன்ன தேதியில் பணம் கொடுத்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தையின் ஓய்வூதிய தொகையை வங்கியில் இருந்து எடுத்து வைத்திருந்துதான் 2016ஆம் ஆண்டில் கொடுத்தேன். வசந்தி என்பவர் எனது சித்தி ஆவார். அவர் எனது அம்மாவின் உடன்பிறந்த சகோதரி ஆவார். அவர் பாண்டிச்சேரியில் வசித்து வருகிறார். மாணிக்கராஜ் என்பவர் மூத்த குடிமக்களுக்கான சிறப்பு உதவி மையம், பாண்டிச்சேரியில் புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால், தெரியும். அது பொய்யான புகாராகும். அதன் முழு விவரம் குறித்து எனக்கு தெரியாது.

11. புகாரில் நானும், எனது சித்தியும் எதிரியை மிரட்டி பணம் பறித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால்தான் நான் புகார் கொடுக்கப்பட்டதாக என்று கேள்விகேட்டபோது, பொய் புகார் என்று உணர்ச்சிவசப்பட்டு கூறினேன் என்றால் சரியல்ல.

( கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆவணங்கள் குறித்து கேள்வி கேட்க வேண்டும் என்று கால அவகாசம் கேட்டதின் பேரில், குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது. )